வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 22/2025

வழக்கு சாட்சி – எ.ம.சா. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. முகமது ரிபான் | தொழில் | :: மீன்பிடி |
| த/ பெயர் | :: முகமது அலி ஜின்னா | வயது | :: 20/2026 |
| கிராமம் | :: தேவிப்பட்டினம் | | |
| தாலுகா | :: இராமநாதபுரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 17.03.2026.

**முதல் விசாரணை** (நேரம் : காலை 11.45 மணி)

நான் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அவை தயார் செய்யப்பட்டது. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து சம்பந்தமாக என் மீது தான் தேவிப்பட்டினம் காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்திற்கு நான் காரணம் இல்லை என்று கூறி காவல்நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் என் அப்பா. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்திலிருந்து மனுதாரர் முழுவதும் மீண்டு வரவில்லை என்றும், அவருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்றும்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.17 17:02:05 +0530

சொன்னால் சரியல்ல. விபத்தானது என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரரும், அதன் காப்பீடு நிறுவனமான 2ம் எதிர்மனுதாரரும் தான் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.17 17:02:10 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.